**சிவகாசி நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**

**அவசரக்கூட்டம் எண் .** **நாள் : 30 .04.2020.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 விகாரி வருடம் சித்திரை திங்கள் 17ஆம் நாள் 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,எம்பில்.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சியின் வருவாய் மூலதனநிதிக் கணக்கு,குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்கணக்கு ,ஆரம்ப கல்வி நிதிக்கணக்கு ஆகியவற்றின் 2020-2021ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அனுமதிக்கலாம்.
ந.க.எண்:3474/2013/பி2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 935

2. சிவகாசி நகராட்சிக்குட்ப்பட்ட பகுதியில் 2020-2021-ம் ஆண்டுக்கு வார்டு எண் 1 முதல் 16 வரை உள்ள குடிநீர் கொண்டு செல்லும் குடிநீர் குழாய்கள் மற்றும் இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் வெம்பக்கோட்டையிலிருந்து சிவகாசி நகருக்கு வரும் பிரதான குழாயில் ஏற்படும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-920 நாள்-28.02.2020-ன் படி அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பொருட்டு 26.03.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | எஸ்.பாண்டிமுருகன் | 0.17% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | ஸ்ரீபழனி கஸ்ட்ரக்சன் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள திரு எஸ்.பாண்டிமுருகன் என்பவர் மதிப்பீட்டினைவிட 0.17% குறைவாக தந்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1259/2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 936

3. சிவகாசி நகராட்சிக்குட்ப்பட்ட பகுதியில் 2020-2021-ம் ஆண்டுக்கு வார்டு எண் 17 முதல் 33 வரை உள்ள குடிநீர் கொண்டு செல்லும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தொகை ரூ.4.60 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-906 நாள்-14.02.2020-ன் படி அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பொருட்டு மேற்கண்ட பணிக்கு 26.03.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | எஸ்.பாண்டிமுருகன் | 0.16% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | ஸ்ரீபழனி கஸ்ட்ரக்சன் | 0.76% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள திரு எஸ்.பாண்டிமுருகன் என்பவர் மதிப்பீட்டினைவிட 0.16% குறைவாக தந்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1216/2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 937

4. சிவகாசி நகராட்சி வார்டு எண் 3 சிவன் கோவில் நந்தவனம் தெருவிலுள்ள ஆழ்துளை கிணற்றில் 3HP சம்பெர்சில் மோட்டார் பொருத்தி மும்முனை மின்னினைப்பு பெரும் பணிக்கு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-860 நாள்-31.01.2020-ன் படி அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பொருட்டு 26.03.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | எஸ்.பாண்டிமுருகன் | 0.487% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | ரவிராஜ் கஸ்ட்ரக்சன் | 1.19% மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள திரு ரவிராஜ் கன்ஸ்ட்ரக்சன் என்பவர் மதிப்பீட்டினை விட 1.19% குறைவாக தந்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:0492/2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 938

5. சிவகாசி நகராட்சி வெம்பக்கோட்டை தலைமை நீரேற்று நிலையம் அணைப்பகுதியில் உள்ள RAW WATER PUMP-ல் 16 மீட்டர் Head,3600lpm Dischrge அளவுள்ள 20HP வெர்டிக்கல் டர்பைப் மோட்டார் வாங்கி பொருத்தும் பணிக்கு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-859 நாள்-31.01.2020-ன் படி அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பொருட்டு 26.03.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | G.ஜானகிராமன் | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | ரவிராஜ் கஸ்ட்ரக்சன் | 10.62% மதிப்பீட்டை விட குறைவு |
| 3. | Rowkal & co., Madurai | 23.57%மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள Rowkal & co., Madurai என்பவர் மதிப்பீட்டினைவிட 23.57% குறைவாக தந்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:753 /2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 939

6. SDRF நிதியின் கீழ் சிவகாசி நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் கொரோனா காய்ச்சல் நோயினை முழுமையாக கட்டுப்படுத்தும் வகையில் நகர்புறங்கள் முழுவதும் மருந்து தெளிப்பதற்க்கு மருந்துதெளிப்பான் (Portable Sprayer) 8 எண்ணம் வாங்கும் பணியை ரூ.1.20இலட்சம் (ஒரு லட்சத்து இருபதாயிரம்) மதிப்பீட்டில் செய்ய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண் 15ன்கீழ் அனுமதி பெறப்பட்டு 08.04.2020-ம் தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள GANGA AGRO CORPORATION,Srivilliputtur அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் . மேற்படி பணிக்கான தொகையை SDRF நிதியில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்: 2109/2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 940

7. சிவகாசி நகராட்சி வெம்பக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆற்றுப்படுகையில் உள்ள 4 வடிகிணறுகள் (IW) மூலமாகவும் வெம்பக்கோட்டை அணையில் உள்ள நீரினை மோட்டர் மூலம் எடுத்தும் சிவகாசி நகராட்சிக்கு பம்பிங்

செய்யப்பட்டுவருகிறது. கோடைகாலமாக இருப்பதால் ஆற்றில் தண்ணீர் இல்லாமல் வறண்டு வடிகிணறுகளில் இருந்து கிடைக்கும் நீரின் அளவு மிகவும் குறைந்துவிட்டது.எனவே அணையின் உட்பகுதியில் உள்ள 4 உறைகிணறுகள் மற்றும் 1 மணல் குவாரி ஆகியவற்றில் 5HP மோனோசெட் மின்மோட்டார்கள் 5எண்ணம் பொருத்தப்பட்டு 3”PVC பைப் 1200 மீட்டர் அளவுக்கு பைப் லைன் அமைத்து 10ச.மி.மீ காப்பர் பிளாட் கேபிள் இணைப்பில் மோட்டார்கள் இயக்கப்பட்டு நீரேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் 4 உறைகிணறுகளில் படிந்திருக்கும் மணலை அகற்றி அதில் 5HP மின்மோட்டார்கள் பொருத்தி இயக்குவதற்க்கு உதிரி சாமான்கள் பெற்று குடிநீர் நீரேற்றம் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3,50,000(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம்) மட்டும் ஆகும். மேற்படி பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:2227/2020/இ2.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 941

8. கோவிட் -19 - வைரஸ் தாக்கத்தினால் 24.03.2020 முதல் ஊரடங்கு அமுலில் இருந்து வரும் நிலையில் பொது மக்களுக்கு அம்மா உணவகத்திலிருந்து சூடாகவும் , சுவையாகவும் உணவுகள் தடையின்றி தயார் செய்து வழங்க வேண்டும் என அரசு தெரிவித்ததின்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18812/2017/MCA4, நாள்.29.04.2020-ன்படி சிவகாசி நகராட்சியால் இயக்கப்பட்டுவரும் அம்மா உணவகத்திற்கு ஊரடங்கு காலத்தில் தினசரி (காலை, மதியம் மற்றும் இரவு) மூன்று வேலைகளிலும் தரமான சுவையான ஆரோக்கியமான உணவுகள் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு COVIT-19 மானிய நிதி முதல் தவணையாக ரூ.2,00,000/-மும் இரண்டாவது தவணையாக ரூ.3,08,000/-மும் மற்றும் மூன்றாவது தவணையாக ரூ.7,00,000/-மும் ஆக மொத்தம் ரூ.12,08,000/- COVIT-19 மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா உணவகத்திற்கு COVIT-19 மானிய தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஊரடங்கு காலத்தில் அம்மா உணவகத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மேற்படி COVIT-19 மானிய நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7724/2014/அ1

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 942

9. சிவகாசி நகராட்சி வார்டு எண் -7 , ஞானகிரி சாலை கதவு எண்15எ, நகராட்சி பணியாளர் குடியிருப்பில் முன்புறம் தகரத்தினால் ஆன மேற்கூரை அமைக்கவும், வீட்டிலுள்ள கழிவுநீர் அருகில் உள்ள மரங்களுக்கு சென்று சேரும் வகையில் பைப்லைன்கள் அமைக்கவும் ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.90,000/-ம் (ரூபாய் .

தொண்ணூறாயிரம் மட்டும் ) ஆகும் இப்பணியினை பொதுநிதியின் கீழ் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: /2020 /இ1

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 943

10. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ந.க..3336/12/2020-12 நாள்:09.04.2020ல் நகராட்சி பகுதிகளில் கொரோனா நொய் தடுப்பு நடவடிக்கைக்கு இந்நகராட்சிக்கு ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி உத்திரவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினிகள், மாஸ்க், கையுறை, பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பு நடவடிக்கைக்கு வரப்பெற்றுள்ள SDRF நிதி ஒதுக்கீட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதற்கும், மேலும் மேற்படி கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை ஒப்பந்த நடவடிக்கை ஏதும் இன்றி பேரிடர் மேலாண்மை நடவடிக்கையினை கருத்தில் கொண்டு நேரிடையாக விநியோகம் செய்து கொள்ள் FINANCE (SALARIES) DEPARTMENT SECRETARIAT, CHENNAI-9 LETTER NO.74/TS(MA) FINANCE/SALARIES/2020 DATED:01.04.2020 உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிறுவனங்களுக்கு நேரிடையாக விநியோக உத்திரவு வழங்கியமைக்கும், தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: 1856/2020/எச்1.

## அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 944

11. சிவகாசி நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த லேசர் பிரின்டர் HP 3015 16.02.2015ல் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அந்த பிரின்டர் பழுதடைந்த நிலையில் உள்ளது அதனை சரி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.11,000/-ம் (ரூபாய். பதினொறாயிரம் மட்டும் ) ஆகும் .

மேலும் சிவன்கோவில் வசூல் மையத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த EPSON LP 310 பிரிண்டர் 02.11.2016ல் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அந்த பிரின்டரும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாள் அதனை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5,000/-ம் (ரூபாய் . ஐந்தாயிரம் மட்டும் ) ஆகும் மேற்க்குறிப்பிட்டுள்ள இரண்டு பிரின்டர்களையும் சரி செய்ய ஆகும் செலவுத் தொகையினை பொதுநிதியின் கீழ் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1633/2020 /இ1

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் :- 945

ஆணையாளர்
சிவகாசி நகராட்சி